பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
12 10 2024 6 45
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மைசூரில் இருந்து பீஹார் மாநிலம் தர்பங்கா நோக்கி சென்றுகொண்டிருந்து **Bagmati** விரைவு ரயில் கும்மிடிப்பூண்டி அருகே நேற்றிரவு தடம்புரண்டது.
- ரயில் தடம்புரண்டதால் சென்னையில் இருந்து வட மாநிலங்கள் நோக்கி செல்லும் 18 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. 20க்கும் மேற்பட்ட ரயில்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டுள்ளன.
- திருச்சியில் இருந்து 141 பயணிகளுடன் நேற்று மாலை ஷார்ஜா புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் இயந்திர கோளாறு காரணமாக மீண்டும் திருச்சி விமான நிலையத்தில் பத்திரமாக தரையிறக்கப்பட்டது.
- விஜயதசமி பண்டிகை நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது.
- இந்தியா – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 3வது மற்றும் கடைசி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி ஹைதராபாதில் இன்று நடைபெறுகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

மைசூரில் இருந்து பீஹார் மாநிலம் தர்பங்கா நோக்கி சென்றுகொண்டிருந்து **Bagmati** விரைவு ரயில் கும்மிடிப்பூண்டி அருகே நேற்றிரவு கவரப்பேட்டை ரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதி தடம்புரண்டது.

இதனால் சுமார் 13 பெட்டிகள் தடம்புரண்டதாக தெற்கு ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்களுக்கு அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

பயணிகள் ரயில் பொன்னேரி அருகே சென்றுகொண்டிருந்தபோது திடீரென குலுங்கியதாக பயணிகள் தெரிவித்தனர்.

அந்த ரயில்கள் நிறுத்தப்படும் பாதையில் சென்று அங்கு ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியது.

இந்த தகவல் அறிந்து தேசிய பேரிடர் மீட்புப் படையினர் அப்பகுதிக்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

மாவட்ட ஆட்சியர் விபத்து நடந்த பகுதிக்கு விரைந்து சென்று மீட்பு மற்றும் அவசரகால ஏற்பாடுகளை செய்தார்.

இந்த விபத்து குறித்து ரயில்வே உயரதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

ரயில் விபத்தால் சென்னை – கும்மிடிப்பூண்டி மார்கத்தில் இரு வழிகளிலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான மைசூரு – தர்பங்கா **Bagmati** விரைவு ரயில் பயணிகள் தொடர்ந்து பயணத்தை மேற்கொள்ள மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்தையடுத்து, தெற்கு ரயில்வேயின் சென்னை வட்டாரம் அவசர உதவி எண்களை அறிவித்துள்ளது.

044 – 2 5 3 5 4 1 5 1 மற்றும்

044 – 2 4 3 5 5 9 9 5

விபத்து நடந்த இடத்தில் முழுவீச்சில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும், இன்று பிற்பகலுக்குள் போக்குவரத்து சீரடையும் என்றும் அதிகாரிகள் கூறியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விபத்து நடந்த பகுதியை தெற்கு ரயில்வே தலைமைப் பொது மேலாளர், திரு. ஆர்.பி. சிங் பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மெயின் லைனில் பயணிகள் ரயில் செல்ல சிக்னல் அளிக்கப்பட்டிருந்ததாகவும், ஆனால் அந்த ரயில், லூப் லயினுக்கு தடம் மாறியதால் விபத்து ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விபத்தல் உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

விபத்து குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ள முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், அமைச்சர் திரு. நாசர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

பயணிகளுக்குத் தேவையான உணவு மற்றும் அவர்கள் ஊர்திரும்ப உரிய ஏற்பாடுகளை செய்ய தனியாக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் சமூக வலைப்பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

விபத்துக்குள்ளான 2 ரயில் பெட்டிகளை அகற்றும் பணியில் ரயில்வே துறையினருடன் இணைந்து தீயணைப்புப் படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் விபத்தில் காயமடைந்து திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

<<<<>>>>

ரயில் விபத்தையடுத்து, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து இன்று புறப்படும் 18 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

பல ரயில்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டுள்ளன.

திருப்பதியில் இருந்து – புதுச்சேரி செல்லும் ரயில், இரு மார்கத்திலும் இன்று ரத்து செய்யப்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து திருப்பதி செல்லும் விரைவு ரயில்கள் அனைத்தும் இரு மார்கத்திலும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

அரக்கோணத்தில் இருந்து புதுச்சேரி செல்லும் ரயிலும், கடப்பாவில் இருந்து அரக்கோணம் செல்லும் ரயிலும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

விஜயவாடாவில் இருந்து சென்னை சென்ட்ரலுக்கு வருகை தரும் பினாக்கினி எக்ஸ்பிரஸ் ரயிலும் இரு மார்கத்திலும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

விபத்து காரணமாக சில ரயில்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டுள்ளன.

தில்லியில் இருந்து சென்னை வரும் தமிழ்நாடு விரைவு ரயில் கூடூரில் இருந்து ரேணிகுண்டா, அரக்கோணம் மார்கமாக திருப்பி விடப்பட்டுள்ளது.

லக்னோவில் இருந்து சென்னை வரும் விரைவு ரயில் நாயுடுப்பேட்டை மற்றும் சூலூர்பேட்டை ரயில் நிலையத்தில் நிற்காமல் ரேணிகுண்டா – அரக்கோணம் வழியாக திருப்பிவிடப்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து மேற்குவங்க மாநிலம் ஷாலிமார் செல்லும் கோரமண்டல் விரைவு ரயில் இன்று காலை 7 மணிக்கு பதிலாக 2 மணி நேரம் தாமதமாக 9 மணிக்கு புறப்பட்டு அரக்கோணம் - ரேணிகுண்டா வழியாக செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

திருச்சியில் இருந்து 141 பயணிகளுடன் நேற்று மாலை ஷார்ஜா புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் இயந்திர கோளாறு காரணமாக மீண்டும் திருச்சி விமான நிலையத்தில் பத்திரமாக தரையிறக்கப்பட்டது.

நேற்று மாலை மணி 5.40க்கு இந்த விமானம் புறப்பட்ட பின்னர் விமானத்தின் சக்கரங்கள் இயங்குவதில் பிரச்சினை இருப்பதாக விமானியிடமிருந்து விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து. அந்த விமானத்தை தரையிறக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியதை அடுத்து கணிசமான எரிபொருள் தீரும் வரை வானிலேயே 2 மணி நேரம் வட்டமடித்த அந்த விமானம், பின்னர் திருச்சி விமான நிலையத்தில் பத்திரமாக தரையிறங்கியது.

விமானத்தில் இருந்த அனைத்துப் பயணிகளும் தரையிறக்கப்பட்டு விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் மாற்று விமானம் ஏற்பாடு செய்யப்பட்டு அந்த விமானம் நள்ளிரவு 2 மணியளவில் திருச்சியில் இருந்து ஷார்ஜா புறப்பட்டுச் சென்றது.

<<<<>>>>

விஜயதசமி பண்டிகை நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளில் மழலைக் குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதால் அவர்களுக்கு நல்ல கல்வியறிவு கிட்டும் என்பது நம்பிக்கையாக உள்ளது.

விஜயதசமியை முன்னிட்டு கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டிணம் முத்தராம்மன் ஆலய தசார திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் இன்று நடைபெற உள்ளது.

இதையொட்டி ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு குழுமியுள்ளதால் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

வங்கக் கடலில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் அனைத்து இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

திருப்பூர், கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், சேலம் மற்றும் கரூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஐ.நா. அமைதிக்காப்பு படையினர் மீது நடத்தப்படும் தாக்குதலை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது என்று பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரான் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியா – ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம், பரஸ்பர புரிதலுடன் வளர்ந்து வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அவசர கருத்தடை மாத்திரைகள் விற்பனை மற்றும் வினியோகத்தில் மாற்றம் ஏதும் இல்லை என்று மத்திய மருந்து தர கட்டுப்பாட்டுக் கழகம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

கடந்த மாதம் குஜராத் மாநிலம் போர்பந்தர் அருகே அவசரமாக தரையிறக்கப்பட்ட ஹெலிகாப்டரில் இருந்து காணாமல்போன விமானியின் உடல் ஒருமாத கால தேடுதல் நடவடிக்கையின் பின்னர் நேற்று கண்டெடுக்கப்பட்டது.

<<<<>>>>

உலக முடக்குவாத தினம் இன்று கடைபிடிக்கபடுவதை ஒட்டி நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

சரஸ்வதி பூஜையை முன்னிட்டு மதுரை பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோவிலில் 108 வீணை இசை வழிபாடு நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதியில் நேற்று காவல்துறையினர் நடத்திய திடீர் சோதனையில் கள்ளச்சாராய ஊறல்கள் மற்றும் கள்ளச்சாராயம் கண்டுபிடித்து அழிக்கப்பட்டன.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 3வது மற்றும் கடைசி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று ஹைதராபாதில் நடைபெற உள்ளது.

இந்தப் போட்டி இரவு ஏழு மணிக்கு தொடங்க உள்ளது. 3 போட்டிகள் கொண்ட தொடரில் ஏற்கனவே இந்தியா முதல் 2 போட்டிகளில் வெற்றி பெற்று 2-0 என்ற புள்ளிக் கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

<<<<>>>>

நியூசிலாந்து அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடி வரும் இந்திய அணியில் இடம்பெற்றுள்ள யாஷ் தயாலை தவிர்த்து மற்ற அனைவரும் இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

<<<<>>>>